உ

கடவுள் துணை

சிறுமணவூர்-முனுசாமி முதலியார்
அவர்களால் இயற்றிய

# கலியுகச்சிந்து



ரத்தினம் பிரஸ்,
(பிராஞ்ச்)
65, திருப்பள்ளி தெரு, மதராஸ்-1

விலை] 1952 [0-1-0

உ

# கலியுகச்சிந்து

---

**நாதநாமக்கிரியை—ஆதிதாளம்—பல்லவி**

காலத்தைப்பாராய்—கலிகாலகொடுமையின்
கோலத்தைக்கேளாய்

**அநுபல்லவி**

காலத்தின் கோலத்தை ஞாலத்தின்மேலோத
பாலொத்தமொழியாளே வேலொத்தவிழியாளே (கா)

**சரணங்கள்**

அரிசிப்படிரெண்டுப் பணமாய்முழிக்குது
ஐயையோ ஏழைகள் புழுகாய்துடிக்குது
வரியெல்லாந்தலைக்குமேல் வாரண்டாய்திரிகுது
வாங்கியகடனோதான் கோர்ட்டுக்கிழுக்குது
புலம்புதே குடிகள் பனிரெண்டுமாதமும் பொளக்குதேவெய்யல்
நாட்டுப்புரங்களெல்லாம் ஓட்டம்பிடிக்குது
நஞ்சைபுஞ்சைகளெல்லாம் பஞ்சமாய்ப்பரக்குது
காடுமேடுகளெல்லாம் கட்டதிட்டமாச்சுது
காக்காய்குருவிகூட பிழைப்பதரிதாய்ப்போச்சி (கால)
மழையோமழையோவென்று மானம்பார்க்கலாச்சி
ஆடுமாடுகள்பேச்சி புல்லுக்கலையலாச்சி
தரையும்உலர்ந்துபோச்சி தண்ணீர்பன்னீராச்சி
தங்கத்தைவைத்தாலும் வட்டிகேழ்க்கலாச்சி
முறைகெட்டுபோச்சிதாயார்-தமக்கைபோலே-பெண்தேடலாச்சி
கொண்டமனைவிபேச்சி கூழுக்கலையலாச்சி
கூத்தியார்பாதத்தைக் காத்துயிறக்கலாச்சி
சொந்தப்படிப்பெல்லாம் சூத்துக்குமனையாச்சி
சொல்லுமிங்கிலீஷுக்கு நல்லப்பிழைப்பாச்சி
காட்டில்மழையாச்சி கழனிவுலர்ந்துபோச்சி
கலப்பைதாத்துக்கோலை யிறப்பிற்சொருகலாச்சி
போட்டவிரைகளெல்லாம் பொறியாய்பறந்துபோச்சி
பிள்ளைகுட்டிகளெல்லாம் கஞ்சிக்கலையலாச்சி
மண்மாரியாச்சி-நாட்டுப்புரங்களெல்லாம்-கண்மாரியாச்சி
இருந்தவிதைகளெல்லாம் ஏனோவிதைத்தோமென்று
எடுஎடுவாயிதா பிடிபிடிஆளென்று
ஏழெட்டுபேராக வீட்டைவளைத்துக்கொண்டு
ஜப்திகளாச்சு-ஆடுமாடுகளெல்லாம்-ஏலமாய்ப்போச்சி
வீட்டுவரிவந்து வாசக்கால்தூக்குது

வியாபாரவரிவந்து சாமானைவளைக்குது
குப்பைவரிவந்து குடிசையைப்பிடுங்குது
கொளுத்தும்விளக்குவரி கழுத்தைப்பிடிக்குது
வேடிக்கையாச்சி - தட்டுமுட்டுகளெல்லாம் - வியாபாரமாச்சி
களிதின்றுபிழைக்கவுங் கேவுறுமுறைக்குது
கம்புசோளங்கூட வம்புகள்செய்யுது
கூலிக்குபோனாலும் லஞ்சங்கள்கேழ்க்குது
கொடுத்தாலும்நாலானல் அடித்துதுறத்துது (கால)
சீமைசீட்டிகளெல்லாம் சிறிப்பாய்சிறித்துபோச்சி
சமுசாரிதாசியும் வேஷம்ஒன்ருய்ப்போச்சி
பெருமையாய்பிழைத்தவர் பிழைப்புக்குசிறிப்பாச்சி
பொய்சாட்சிசொல்வோர்க்குக் கைமேற்காசுயாச்சி
கடைகெட்டுபோச்சி - சர்வகுலங்களும் - நடைதப்பிபோச்சி
அந்தனன்குலத்துடன் ஆச்சாரம்போச்சுது
அவரவர்சாஸ்திரம் பரணைமேற்றாங்குது
பணமென்ருல் பிணங்கூட வாய்கொஞ்சந்திறக்குது
பாசுபண்ணவர்பேச்சி வேலைக்குத்தொங்குது (கால)
தாயொப்பிவந்தாலுஞ் சேயன்புணரலாச்சி
தம்பிதமயன்பெண்டை தெம்பாயிழுக்கலாச்சி
நாய்போலேவிலைமாதர் யெங்கும்பெருத்துப்போச்சி
நாயகனொப்பியே கூட்டிப்பிழைக்கலாச்சி
கூனைகெட்டுப்போச்சி - பணமேபெருமையாச்சி - சாதிகள்போச்சி
பலத்தவுத்தியோகத்தைப் பார்க்கமனைவியாச்சி
படுத்துயிருக்கும்போது அடுத்துபுணரலாச்சி
கலங்கிவேசியரெல்லாம் கண்ணீர்சொரியலாச்சி
கட்டினமனைவியை விட்டுபிழைக்கலாச்சி
வழிகெட்டுபோச்சி - தகப்பன்பிள்ளையுங்கூட - வழக்காடலாச்சி
பூமியிற்பிழைப்பற்று காவியுடுக்கலாச்சி
பூரணமாய்கஞ்சா தம் அடித்துமயங்கலாச்சி
சாமியென்றவருக்குப் பேர்கள்நிகளமாச்சி
சாம்பலைபூசவுந் தெரியாதவருக்குசீசி (கால)
கடுகடுத்துப்பெற்றத் தாயையுதைக்கலாச்சி
கட்டினமனைவிசொல் தட்டாதிருக்கலாச்சி
கொடுத்தகடனைக்கேட்டால் கோர்ட்டைக்காட்டலாச்சி
கொஞ்சயேமாந்தாக்கால் பஞ்சாயடிக்கலாச்சி
அஞ்சாமல்போச்சு - பெரியோர்சிறியோரென்ற - அளவெல்லாம்
போச்சு
அறுத்தமுண்டைகள்பிள்ளை பெற்றுவளர்க்கலாச்சி

அப்பனே மாந்தாக்கால் தாயைப்புணரலாச்சி
திருட்டுபிள்ளைகள்பெற்று முறித்துள்றியலாச்சி
தெய்வத்தைநினைப்பவர் லட்சத்திலொருவராச்சி (கால)
கட்டிகொடுக்குமுன்னே கள்ளைகுடிக்கலாச்சி
கட்டினமூன்றுநாள் பெற்றுமுறிக்கலாச்சி
மட்டிமுண்டைகளாலே மானங்கெட்டுப்போச்சி
மாதாபிதாபேச்சி தலையைகுனியலாச்சி

அதிகமாய்ப்போச்சு-குடிகெட்டமுண்டைகள்-அணியணியலாச்சி

பெண்டுகள்வியாபாரஞ் செய்துபிழைக்கலாச்சி
புருஷன்வெளுக்கக்கட்டி பினத்தித்திரியலாச்சி
சண்டைசாவடிகளெல்லாம் பணத்தையிறக்கலாச்சி
சாமிக்குக்கொடுப்பவர் தரணியில்மருந்தாச்சி (கால)
பஞ்சாங்கம்படிப்பெல்லாம் பஞ்சாய்பறந்துபோச்சி
பறைச்சிக்கும்பணந்தந்து சிறப்பாய்நடக்கலாச்சி
அஞ்சாமற்பரச்சோற்றில் அந்தணர்விழலாச்சி
அவர்கள்மனைவியெல்லா அழுதுபுலம்பலாச்சி

குலங்கெட்டுபோச்சி-அந்தணராலே-குடிகெட்டுபோச்சி

துரைக்குப்பிறந்தவன்போல் தொப்பிசட்டைகளாச்சி
ஜோடும்செருப்பும்போச்சி பூடுசுதூக்கலாச்சி
அடுப்பங்கரையிற்கூட இங்கிலீஷ்பேசலாச்சி
ஐயமார்குடிக்கவே அடிக்கொருகடையாச்சி (கால)
சீமைதுரைகளெல்லாம் காவியுடுக்கலாச்சி
சாதிதமிழரெல்லாம் சட்டைமாட்டலாச்சி
காலந்தலைகீழாச்சி கருப்புங்குடியாய்போச்சி
கண்டவிடங்களெல்லாம் பைபிலிரைக்கலாச்சி

வேதங்கள்போச்சி-கிறிஸ்தவர்கூச்சலிலே-வேடிக்கையாச்சி

கோயில்குளங்களெல்லாங் குட்டிச்சுவராய்போச்சி
குடியரதிகமாச்சி கடைகள்பெருத்துப்போச்சி
கிராமதேவிகளெல்லாம் கடையாய்ப்பறந்துபோச்சி
கண்டவிடத்தில்வாந்தி பேதியதிகமாச்சி (கால)
கலியுகநடத்தைக்கு கடவுளுஞ்சிறிக்குது
காலத்திற்கேற்றப்போ மாரிகள்வருகுது
குளிர்காச்சலிற்பாதி கூண்டோடேசாய்குது
குந்தியிருந்தபேரை வாந்தியில்மடக்குது

பேதியிற்பாதி-இப்படிமடிஞ்சியும்-துள்ளுதேகூவி-ஐயோ

இன்றைக்கிருந்தவர் நாளைக்கில்லையென்று
யாருக்குந்தெரியுமிந்த ஊருக்குந்தெரியுமிது

ஏனைகருவங்கொண்டு வீருகமடியுது
எண்ணிப்பார்த்தால்தினம் ஆயிரஞ்சாயுது (கால)
பணங்கையில்வருமென்று பொய்சாட்சிசொல்லாதே
பரிதேசியேழைமேற் புலிபோலதுள்ளாதே
முழுவேஷம்போட்டுநீ மோசங்கள்செய்யாதே
மூச்சுவெளியேபோனல் சீச்சீபிணமாச்சே
கெருவங்கொள்ளாதே-நிலையில்லாகழுதைநீ-கெட்டுப்போகாதே
ஊற்றையுடலைநம்பி ஓதிபோலேநிகலாதே
ஊரைப்பகைத்துக்கொண்டு வேருடன்மாளாதே
காற்றைமலைத்துக்கொண்டு கருமங்கள்தேடாதே
கலியுகச்சிந்தைநீ பழுதாகச்சொல்லாதே (கால)

---

## கும்மி

அண்ணனுக்குத் தம்பி துரோகஞ் செய்யுஞ்காலம்
அப்பனைப்பிள்ளை யுதைக்குங்காலம்-பண்ணின நன்றி
மறக்குங்காலம் பழி-பாபத்துக்கஞ்சா கலிகாலம். 1

புருஷனைப்பெண்டுருதைக்குங் காலம் பெற்ற
பெண்ணைத் தகப்பன் புணருங்காலம்-தருமநெறியை
மறக்குங்காலம் கெட்ட தருதலைக்கேற்ற கலிகாலம். 2

தங்கையை அண்ணன் புணருங்காலம்-ஐயா-
தாயைப்பொலிந்து மடியுங்காலம்-மங்கைக்கு மஞ்ச
ளரைக்குங்காலம்-ஐயா மானமில்லாத கலிகாலம். 3

கொண்ட புருஷனைத் திட்டுங்காலம்-இவள் கூலி
கொடுத்துப் புணருங்காலம்-முண்டைகள் பிள்ளை
பெருகுங்காலம்-ஐயோ மோசத்துக்கஞ்சா கலிகாலம். 4

கட்டினமாது அலையுங்காலம்-மிவன்-காவியுடுத்
தித் திரியுங்காலம் புட்டிபுட்டியாய்க் குடிக்குங்காலம்-
ஐயா புளுகருக்கேற்ற கலிகாலம். 5

பியேயும் பீயெல்லும் படித்துவிட்டு ஐயா
பிழைக்க ஜீவனமில்லாமல கையேந்திப் பூரிகள் வாங்
கிப்பிழைக்கின்றார் கலியுகக்கால மிதுவல்லவோ. 6

விக்கிரமாதித்தன் நாளிலுந்தர்ம வேதநெறி
நளன் காலத்திலும் அக்கிறமிப்படி கேட்டதில்லையை
யோ அந்தணருத்தியோகஞ் செய்ததில்லை. 7

சொந்தப்புருஷனைத் திட்டுங்காலமிவள் சொல்லா
மற்றாய்வீடு போகுங்காலம்-கணவன் மனைவியை
யழைக்க வந்தாலவனைக்கண்டபடியாகத் திட்டுங்காலம்.

கள்ளத்தனமாய் புணர்ந்து பிள்ளைபெற்று கண்டவிடத்திலெரிந்துவிட்டு நல்லசமுசாரி போலேமினுக்கியே நாட்டைக்கெடுக்குங் கலிகாலம். 9

புருஷனைப்பெண்சாதி திட்டுங்காலமையா புருஷன் தலையைக் குனியுங்காலம் கணவனை சாட்சியாய் வைத்துக்கொண்டு யிவள் கருத்தைப்போலே நடக்குங்காலம். 10

சொந்தப்பெண்சாதிக்குப் பயந்துவிட்டு மவன் சொல்லாமல் ரெயிலேறுங்காலம் போனாலும் போகுரானென்று சொல்லியிவள் பெற்று வளர்க்குங் கலிகாலம்.

பொய்யான பத்திரமெழுதுங்காலம்-சாட்சி பூட்டியே கோர்ட்டில் கெலிக்குங்காலம்-தெய்வபொருளைத் திருடுங்காலமிது தீவினைக்கஞ்சா கலிகாலம். 12

அருமையறியா முரட்டுக்காலமிது தர்மியைப் போற்றுந் திருட்டுக்காலம்-சிறுவன் சொல்லிய வாக்கியப்படியே சோதித்துப்பார் கலிகாலகுணம். 13

## நொண்டிச்சிந்து

ஆறுமாதக்கடன்காரர்-அவருக்கு அண்ணனென்றுவுரைக்கலாம் மாறுபாடிகள்-தாருமாறுக் காயலார்கள்-ஊரெங்கும் தானுய்வலியவந்து கடன்கொடுதது பத்துக்கு அஞ்சி வட்டியாம்-அந்த பத்திரமெழுத்துங் கூலியது வேரேயாம்-தருமத்தின் காசிவேரேயாம்-இப்படித் தந்திரமாயேழைகள் வாயிலடித்து-தட்டுமுட்டு தவலை சொம்பு-பெட்டிமுதல் தந்ததெல்லாம் வந்தமட்டும் வலித்துக்கொண்டு-வாயிலொருகணக் குறைப்பார்-கணககிலே-வாங்கிவெகு நாளைப்போலே எழுதிடுவார்-பணத்தைக் கொடுத்தனுப்புவார்-வாங்கியவன்-பாதி வழி போகுமுன்னே சம்மனெடுப்பார்.—தந்தினம்.

இப்படி இவர்களெழவாம்-நாட்டுகளில் ஈட்டிக்காரர் கோருமை கேட்கப்பயமாம்-சைதாப்பேட்டை துண்டுகளையும்-வைகுண்ட சல்லாப்போல் கந்தைகளை வாரிக்கொண்டு-வலைப்போல் புடவைகளையும்-கவைக்குதவாதமேஜி துண்டு துண்டாய் கிழித்துக்கொண்டு-செம்மண்ணுப் பகுடர்களும்-நல்ல சேருப்போலே கரைத்தேய்த்துக்கொண்டு-கஞ்சியிலே போட்டுப்பிழிந்து-கந்தைகளை கருவாடுபோலுணத்தி-மடித்துக்கொண்டு-நாட்டுப்புறங் காடுமேடெல்லாம் கும்பலாய்-நாலைந்து பேருகநுழைந்திடுவார்-நெல்லூருவேஷ்டி

களென்பார்-நூலெல்லாம் நேராக சீமைசாயம் போகா தென்பார்-மதுரைப்புடவைகளென்பார்-இதுமாட்டுத் தோலைப் போலிருக்கும் கிழியாதென்பார்-கடனுக்கு தருவோமென்பார்-நித்தியம் காலணாவிற்காடு கொடுங் களென்பார்-தெரியாமற் கடனெடுத்தால்-தெருவாசற் படியில் படுத்து காறிமுழிவார்-கொடுத்தகடனைக்கேட் பார்-அவர்-குந்தின இடத்தைவிட்டு அசையமாட்டார்-சூனியங்கள் வைப்போமென்பார்-ஆடுமாடு சுரண்டி டும் யேவலிதோ செய்குரோமென்பார்—தந்தினம்.

## கலிகாலக்கண்ணாடி

| | |
|---|---|
| தகப்பனுக்கு மகனழவு | பழக்குங்காலம் |
| தமயனுக்குத்தம்பிபுத்தி | சொல்லுங்காலம் |
| குருக்களிருந்தாசனத்தி | லிருக்குங்காலம் |
| கொடுத்தகடன் கேட்பவரை | யுதைக்குங்காலம் |
| •வலக்கைபிடித்தரசாணி | சுற்றிவந்த |
| மாப்பிள்ளையை மருந்திட்டுக் | கொல்லுங்காலம் |
| கணக்கருக்கு அடிவழக்கு | பேசுங்காலம் |
| கலிகாலமாமிந்தக் | காலந்தானே (1) |
| வாய்வேகமாகரெயில் | ஓடுங்காலம் |
| வாய்பேச்சுதந்திவழி | பேசுங்காலம் |
| தாய்பேச்சிபிள்ளைகட்கு | விஷமாகுங்காலம் |
| தன்மனைவிமனதின்போல | நடக்குங்காலம் |
| நாய்போல விலைமாதர் | பெருத்தகாலம் |
| நம்பினோமென்றவறைக் | கெடுக்குங்காலம் |
| காதலெனும் மனையாளை | வணங்குங்காலம் |
| கலிகாலமாமிந்தக் | காலந்தானே (2) |
| முண்டச்சிகள்சந்துசந்தாய் | திரியுங்காலம் |
| முலைகாட்டிமுகசுண்டை | பரிக்குங்காலம் |
| தங்கைதனைதமயன்பெண் | டாளுங்காலம் |
| தமயன்பெண்டைதமபிசிறை | யெடுக்குங்காலம் |
| பருவப்பெண் திண்ணைமே | லுட்காருங்காலம் |
| பரிகாசவார்த்தைதனைப் | பேசுங்காலம் |
| கருவழிக்கமருந்திட்டுக் | கொல்லுங்காலம் |
| கலிகாலமாமிந்தக் | காலந்தானே (3) |
| மாமனையே மருமகளும் | மருவுங்காலம் |
| மாமியார் மருமகனை | மருவுங்காலம் |
| பெற்றவளும் பிள்ளைதனைச் | சேருங்காலம் |
| பெற்றவளுந்தகப்பனையே | பினையுங்காலம் |

தன்மனைவி திலோர் தமை போலிருக்குங்காலம்
தடியர்களும் சந்துசந்தாய் திரியுங்காலம்
காமமெனும் கடலில் மூழ்குங்காலம்
கலிகாலமாமிந்தக் காலந்தானே (4)
சங்கையற்று திண்ணைமேல் வுட்காருங்காலம்
சமுசாரிஎன்றபேர் நீளுங்காலம்
கொங்கைதனைக்காட்டியே அழைக்குங்காலம்
கொழுந்தனுடன் ஆசைவைத்துப் பேசுங்காலம்
பாட்டிகளை பேரன்பெண் டாளுங்காலம்
பாலகனைபெற்றுதா லாட்டுங்காலம்
களிப்புடனே வுடன்பிறப்பை புணருங்காலம்
கலிகாலமாமிந்தக் காலந்தானே (5)
பிள்ளைபெற்று ஆற்ருரம் போடலாச்சு
புருஷனடித்தால் விரையைப் பிடிக்கலாச்சு
கணவன்யேமாந்தாலே அடிக்கலாச்சு
களிப்புடனே தாய்வீடு சேரலாச்சு
பெண்தனிவழியாய்தாய்வீடு போகலாச்சு
பெற்றவருங்கூட்டியே கொடுக்கலாச்சு
களிப்புடனேகூட்டியே பிழைக்கலாச்சு
கலிகாலமாமிந்தக் காலந்தானே (6)
அவுசாரி வுலகத்தில் அனேகமாச்சு
அன்னநடை தாசிகட்கு பிழைப்பும்போச்சு
புவிமீதில்கவிவானர் பிழைப்பும்போச்சு
புத்தியில்லா மடையருக்கே காலமாச்சு
பருவப்பெண்பாட்டுகளும் பாடலாச்சு
பழுத்தகிழமாப்பிள்ளையை புணரலாச்சு
கற்றவரை கல்லாதார் இகழலாச்சு
கலிகாலமாமிந்தக் காலந்தானே (7)
முண்டைகளும் புருஷனையே தேடலாச்சு
முகமினுக்கிகண்டபடி திரியலாச்சு
அண்டைவீட்டுமன்னர்களை கெடுக்கலாச்சு
அடுத்தவரை அன்றைக்கே கொல்லலாச்சு
கொண்டைக்கிமினுக்கெண்ணை தடவலாச்சு
கொழுந்தனுக்கு பிள்ளைபெற்று வளர்க்கலாச்சு
கன்னியர்கள் கண்டவரை புணரலாச்சு
கலிகாலமாமிந்தக் காலந்தானே (8)

ரத்தினம் பிரஸ் (பிராஞ்ச்) 65, திருப்பள்ளி தெரு, சென்னை-1.